

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.07.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 63 திருக்கோயில்களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் வகையிலான திருப்பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 63 திருக்கோயில்களின் புனரமைப்பு திருப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!... முதல் பக்கத் தொடர்ச்சி

அருள்மிகு வலம்புரநாதசுவாமி திருக்கோயில், கீழையூர், அருள்மிகு கடைமுடீஸ்வரசுவாமி திருக்கோயில், பெருந்தோட்டம், அருள்மிகு ஐராதீஸ்வதீஸ்வரர் திருக்கோயில், தலைச்சங்காடு, அருள்மிகு சங்கரணேஸ்வரர் திருக்கோயில், மூவலூர், அருள்மிகு மார்கசயேஸ்வரர் சுவாமி திருக்கோயில், மகேந்திரப்பள்ளி, அருள்மிகு திருமேனியழகர் திருக்கோயில்;

கடலூர் மாவட்டம், திருமூலஸ்தாணம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், ராஜேந்திரசோழகன், அருள்மிகு தோளீஸ்வரர் திருக்கோயில், திருவட்டத்துறை, அருள்மிகுதீர்த்தபுரீஸ்வரர் திருக்கோயில், திருவேட்களம், அருள்மிகு பாசுபதீஸ்வரர் திருக்கோயில், திருச்சோபுரம், அருள்மிகு திருச்சோபுரநாதர் திருக்கோயில், திருவதிகை, அருள்மிகு வீரட்டானேசுவரர் திருக்கோயில், திருமாணிக்குழி, அருள்மிகு வாமனபுரீஸ்வரர் திருக்கோயில், திருவாமூர், அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், வி.நெற்குணம், அருள்மிகு ஆளுடையநாயனார் திருக்கோயில், கப்பூர், அருள்மிகு செய்தருளீஸ்வரர் திருக்கோயில், டி.முடையனூர், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், கூகையூர், அருள்மிகு காரீயாம்புரீஸ்வரர் திருக்கோயில், கச்சிராப்பாளையம், அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், கூகையூர், அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில், எலவனாசூர்கோட்டை, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், வரஞ்சரம், அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம், அருள்மிகு ரிஷபேஷ்வரர் திருக்கோயில், காஞ்சி, அருள்மிகு கரைகண்டீஸ்வரர் திருக்கோயில், பிரம்மதேசம் புதூர், அருள்மிகு ருத்ரகோட்டீஸ்வரர் திருக்கோயில், தாமரைப்பாக்கம், அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்;

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், அருள்மிகு பச்சைவண்ணர் மற்றும் பவள வண்ணர் திருக்கோயில், காஞ்சிபுரம், அருள்மிகு அழகிய சிங்கபெருமாள் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், செஞ்சி பானம்பாக்கம், அருள்மிகு ஜனமேஜெயீஸ்வரர் திருக்கோயில், செங்கல்பட்டு மாவட்டம், மண்ணிவாக்கம், அருள்மிகு மண்ணீஸ்வரர் திருக்கோயில், வேலூர் மாவட்டம், அன்பூண்டி, அருள்மிகு திருத்தாளீஸ்வரர் திருக்கோயில், திருவலம், அருள்மிகு வில்வநாதீஸ்வரர் திருக்கோயில், இராணிப்பேட்டை மாவட்டம், பள்ளூர், அருள்மிகு திருக்குகேஸ்வரர் திருக்கோயில், பெருங்காஞ்சி, அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில், காவேரிப்பாக்கம், அருள்மிகு அபயவரதராஜப் பெருமாள் திருக்கோயில்;

ஆகிய 63 திருக்கோயில்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் வகையிலான திருப்பணிகளை நேற்று தொடங்கி வைத்தார்.

இதன்மூலம் நமது கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பறைசாற்றும் காலப் பெட்டகங்களாக திகழும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களின் தொன்மை மற்றும் கட்டடக் கலை போன்றவற்றை வருங்கால தலைமுறையினரும் அறிந்து கொள்ள பேருதவியாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அற நிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக காஞ்சிபுரத்திலிருந்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், க.சுந்தர், காஞ்சி புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 'தமிழில் அர்ச்சனை' எனும் புரட்சியை முன்னெடுத்தவர்!

# திராவிட இயக்கத்துக்குத் துணையாக நின்ற மாண்பாளர்!

## தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



**சென்னை, ஜூலை 12 -**

**“தமிழில் அர்ச்சனை எனும் புரட்சியை முன்னெடுத்தவர், திராவிட இயக்கத்துக்குத் துணையாக நின்ற மாண்பாளர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்” என்று அவரின் நூற்றாண்டு நிறைவையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டார்.**

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு: -

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவு இன்று!

தமிழில் அருச்சனை எனும் புரட்சியை முன்னெடுத்தவர்!

சமூகநீதித் தளத்தில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் எனத் திராவிட இயக்கத்துக்குத் துணையாக நின்ற மாண்பாளர்!

சோவியத் யூனியன் பயணத்தின் உந்துதலால், பிரதமர் இந்திரா காந்தி அவர்களே பாராட்டிய ‘குன்றக்குடிக் கிராமத் திட்டம்’ கொண்டு வந்த பொதுவுடைமைச் சிந்தனையாளர்!

பகட்டுச் சம்பிரதாயங்களைத் தவிர்த்து மனிதநேயம் போற்றிய சமத்துவச் சிந்தனையாளர்!

இந்தி எதிர்ப்புப் போரில் பங்கெடுத்த தமிழுணர்வாளர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விருப்பத்தின் வழியே தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகி, மேலவையில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகப் பேசிய பெருந்தகையாளர்!

தமிழ்ச்சமூகத்தின் சமூகவியல் உள்ளடக்கிய இறையியல் அடையாளமாக விளங்கும் திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி 45ஆவது மகாசந்நிதானம் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் எனும் குன்றக்குடி அடிகளாரின் புகழ் வாழ்க!

அவரது வழியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் தொண்டு தொடரட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## ‘கீழடியில் ஒன்றுமில்லை’ என ஆய்வறிக்கை எழுதித் தருமாறு வற்புறுத்துவது

# ஒன்றிய அரசின் வரலாற்றுத் துரோகம்!

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜூலை 12 -

‘கீழடியில் ஒன்றுமில்லை’ என்று கூறிய பு.சு.ஸ்ரீராமனை கீழடி தொடர்பான ஆய்வறிக்கை எழுதித் தருமாறு ஒன்றிய அகழ்வாய்வுத் துறை கேட்டிருப்பது அப்பட்டமான வரலாற்றுத் துரோகமாகும் என்று 11.7.2025 அன்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

கீழடி அகழ்வாய்வு முடிவுகளை குழிதோண்டி புதைப்பதற்கு ஒன்றிய அரசு தொடர்ந்து சதி செய்து வருகிறது. கீழடியில் ஒன்றிய தொல்லியல் துறையின் சார்பில் முதல் இரண்டு கட்ட ஆய்வுகளை பொறுப் பேற்று அமர்நாத் ராமகிருஷ்ணன் நடத்தினார்.

இந்த ஆய்வுகளில் பல்வேறு தொல்லியல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு சங்க இலக்கியம் பேசிய தமிழர் வாழ்வியலில் பொருண்மைச் சான்று வெளிப்பட்டது.

இதை ஒன்றிய ஆட்சியாளர்களால் பொறுத் துக் கொள்ள முடியவில்லை. கீழடி அகழ்வாய்வு பொறுப்பிலிருந்து அமர்நாத் ராமகிருஷ்ணன் மாற்றப்பட்டு பு.சு.ஸ்ரீராமன் என்பவர் நியமிக்கப்பட்டார்.

மூன்றாம் கட்ட ஆய்வை மேற்கொண்ட இவர், கீழடியில் உருப்படியாக எதுவும் கிடைக்கவில்லை; கட்டடங்கள் தொடர்ச்சியாகவோ, பரவலாகவோ இல்லை என்று தெரிய வருகிறது என்று கூறினார். இதைத் தொடர்ந்துதான் கீழடி அகழ்வாய்விற்கு நிதி ஒதுக்க மறுத்து ஒன்றிய அகழ்வாய்வு துறை விலகிக் கொண்டது.

இதைத் தொடர்ந்து தமிழக தொல்லியல் துறை கீழடியில் தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொண்டதில் பல்வேறு தொன்மைச் சான்றுகள் கிடைத்து வருகின்றன. அமர்நாத் ராமகிருஷ்ணன் தாம் மேற்கொண்ட ஆய்வறிக்கையை எழுதி தருவதற்கு கூட உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டியிருந்தது.

அதன் பின்னும் அவர் எழுதி தந்த அறிக்கையை திருத்தித் தருமாறு ஒன்றிய அகழ்வாய்வுத் துறை நிர்ப்பந்தித்தது. இதற்கு அவர் இணங்கா ததால் பழிவாங்கும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் கீழடியில் ஒன்றுமில்லை என்று கூறிய பு.சு.ஸ்ரீராமனை கீழடி தொடர்பான ஆய்வறிக்கையை எழுதித் தருமாறு ஒன்றிய அகழ்வாய்வுத் துறை கேட்டிருப்பது அப்பட்டமான வரலாற்றுத் துரோகமாகும்.

ஸ்ரீராமன் தற்போது பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டார். ஆனால் கீழடி அகழ்வாய்வை ஒன்றுமில்லாமல் செய்வதற்காகவே, அங்கு ஒன்றுமில்லை என்று சொன்னவரை அறிக்கை எழுதுமாறு கூறியிருக்கிறார்கள்.

ஸ்ரீராமன் கீழடி அகழ்வாய்வு பொறுப்பாளராக இருந்தபோது அவர் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. கீழடியில் ஒரு குழி கூட இயற்கை மண்படிமம் வரை தோண்டப்படவில்லை. ஒரு குழியைக் கூட முழுமையாக தோண்டவில்லை. உச்சகட்ட கொடுமையாக ஏற்கெனவே கண்டறியப்பட்ட பொருள்களையும் கூட வெட்ட வெளியில் போட்டு அழித்துக் கொண்டிருந்தவர் இவர். அண்மையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா கீழடி அகழ்வாய்வு முடிவுகள் இந்தியாவுக்கே பெருமை என்றெல்லாம் பொய்யாக புகழ்ந்துரைத்தார். ஆனால் கீழடி மண்ணிலிருந்து வெளிவரும் உண்மை வரலாறு இவர்கள் புனைந்துரைக்கும் புராணங்களை மறுதலிக்கிறது. எப்படியாவது தங்கள் கருத்தியலுக்கு ஏற்ற வகையில் வரலாற்றை திருத்த துடிக்கிறார்கள். அதற்குத் தான் ஓய்வு பெற்ற ஒருவருக்கு ஓவர் டைம் கொடுத்து அழைத்து வருகிறார்கள். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம்வரும் செய்தி!




# பா.ஜ.க.வின் சூழ்ச்சிகளில் இருந்து காக்கிறார் திராவிட மாடல் நாயகர்!

## கலைஞர் நூலக வாசகர் சந்திப்பில் இளம் பேச்சாளர் ஹேமநாதன் பேச்சு!





சென்னை, ஜூலை 12

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன்தொடர்ச்சியாக 09.07.2025 அன்று 118வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் ஹேமநாதன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வியை சீர்குலைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொள்ளும் சூழ்ச்சிகளை எடுத்துரைத்தார்.

மேலும் “புதிய கல்விக் கொள்கை என்ற போர்வையில் தமிழ்நாட்டின் இருமொழி கல்விக்கொள்கையை ஒழிக்க நினைக்கிறது பா.ஜ.க. அரசு. 3ஆம் வகுப்பு, 5ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்பு என பொதுத்தேர்வை கொண்டு வந்து மாணவர்களை கல்வியில் இருந்து விரட்டியடிக்க நினைக்கிறது.

ஆனால் நம் திராவிட மாடல் முதல்வர் இதை நம் மண்ணில் நுழைய விடாமல் நம்மை காத்து வருகிறார்” என்றார்.

நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான ‘திராவிட மாடல் அரசு’ நூல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஜே.எம்.எச்.இம்ரான், என்.மோகன்வேல், பகுதி அமைப்பாளர் புவனேஷ் ஸ்ரீவட்சன், பகுதி துணை அமைப்பாளர் கு.தீபன் சக்கரவர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.